Deputy Supdt. of Police
Vigilance and Anti-Corruption,
Kallakurichi.

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 808326

1. District : நள்ளக்குறிச்சி PS: ஊ.த.க. சரிய Year: 2025 FIR No.: 03/2025 Date: 13.06.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC ACT 1988 as Amended Sections பிரிவுகள்: 07, 12 r/w 7 of PC ACT
(ii) Act சட்டம்: by PC ACT 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: BNSS 2023 Sections பிரிவுகள்: 106 BNSS
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 12.06.2025 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 14.50 Hrs Time to : 22.45 Hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 13.06.2025 Time : 07.00 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.06.2025 நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தணிணியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 30.கி.மீ கிழக்கு
Beat Number : (b) Address : அட்டார போக்குவரத்து அலுவலகம், உளுந்தூர்பேட்டை
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திருமதி. திரவணி (b) Father's/ Husband's Name : கோவிந்தன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : அங்கன்வாடி (g) Address : முகவரி மாவட்ட அங்கன்வாடி அலுவலர் அலுவலகம், கடலூர்
தொழில் அலுவலர், கடலூர் விருப்புரம், நள்ளக்குறிச்சி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திரு. மாணிக்கம், மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-1), நள்ளக்குறிச்சி, (முன்னாள்) உளுந்தூர்பேட்டை, 2. தனிநபர் திரு. பாலாஜி நாராயணன், 3. தனிநபர் திரு. நீரன், 4. தனிநபர் திரு. சக்திபாண்டி, 5. தனிநபர் திரு. தியாகராஜன், 6. தனிநபர் திரு. மாரா, 7. தனிநபர் திரு. ரஜினி, 8. தனிநபர் திரு. திருமண

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .....காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

13/06/2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13.06.2025

Name: பெயர் K. SATHIYARAJ
Rank: நிலை DSP No. எண் VAAC
KALLAKURICHI

கள்ளக்குறிச்சி ஊ.த.க.பிரிவு குற்ற எண்.03/2025, u/s 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 106 BNSS வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12 இன் விபரம்.

பணிந்து அனுப்பப்படுகிறது, அய்யா, நான் இன்று 13.06.2025-ந் தேதி சுமார் 07.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.இராணி அவர்கள் கொடுத்த புகார் மனுவை பெற்று இன்று 13.06.2025, 08.00 மணிக்கு கள்ளக்குறிச்சி ஊ.த.க பிரிவு குற்ற எண்.03/2025/KLK, u/s 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 106 BNSS-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வாதி கொடுத்த புகார் மனுவின் விபரம், அனுப்புநர், திருமதி.இராணி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம், கடலூர். பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கள்ளக்குறிச்சி. ந.க.எண்:அ/493/2025, நாள்:13.06.2025. பொருள்: திடீர் ஆய்வு - கள்ளக்குறிச்சி மாவட்டம் - உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகம் - 12.06.2025 அன்று கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக: பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்:12.06.2025.

கள்ளக்குறிச்சி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான திருமதி.இராணி ஆகிய நான் 12.06.2025-ம் தேதி எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் டிரைவிங் ஸ்கூல் நடத்துபவர்கள் மற்றும் புரோக்கர்கள் போன்று செயல்படும் வெளிநபர்கள் 12.06.2025 அன்று உளுந்தூர்பேட்டை வட்டார அலுவலகத்தில் உள்ள அலுவலக ஊழியர்களை சந்தித்து பணம் கொடுக்க போவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் கள்ளக்குறிச்சி மாவட்டம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து அங்கு பணியில் இருந்த திரு.க.சத்தியராஜ், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம், உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து அதன்படி நானும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினரும் உடனடியாக அரசு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 14.50 மணியளவில் உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தினுள் சென்று அங்கிருந்தவர்களிடமும் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடமும் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களிடம் அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்துவிட்டு பின்னர் அவர்கள் முன்னிலையில் எங்களை சுய பரிசோதனை செய்த பின்பு மேற்படி அலுவலகத்தில் உள்ளவர்களையும், அலுவலகத்தையும் சோதனை செய்தபோது, அலுவலகத்தில்

பின்னர் தெரிந்த 1) திரு.மாணிக்கம், மோட்டர் வாகன ஆய்வாளர் (நிலை-1) 2) திருமதி. ரோஜா, அலுவலக உதவியாளர் 3) திருமதி. நர்மதா கண்காணிப்பாளர் 4) திருமதி.அஞ்சாமணி தட்டச்சர் 5) கோபிநாத், இளநிலை உதவியாளர் 6) திரு. சையத் சாதிக், உதவியாளர் 7) சீனுவாசன் உதவியாளர 8) விஜய், கணக்காளர் 9) விக்டோரியா பதிவரை எழுத்தர் 10) சிவசுப்ரமணியன், இளநிலை உதவியாளர் அவர்களும், மேலும் அலுவலகத்தில் தனிநபர்களான 1) பாவடைராயன் வயது 60/2025 த/பெ வெங்கடேசன் 2) தீரன், வயது 34/2025 த/பெ மோகன் 3) திரு.சங்கரபாணி வயது 58/2025 த/பெ முத்துகுமாரசாமி 4) திரு.தியாகராஜன், வயது 41/2025 த/பெ சுப்புராயன் 5) திரு.பாலா வயது 41/2025 த/பெ சம்பத் 6) திரு.ரபிக், வயது 42/2025 த/பெ அப்துல் முனாப் 7) திரு.திருமலை வயது 36/2025 த/பெ கண்ணன் 8) திரு.தர்மலிங்கம் வயது 49/2025 த/பெ காசி 9) திரு.முனுசாமி த/பெ நடேசடன் 10) திரு.ராஹிம் த/பெ அல்லா பிக்ஷ் 11) திரு.பிரபு த/பெ முத்தூலிங்கம், 12) அலெக்ஸாண்டர் த/பெ ஏழுமலை 13) திரு.பசுபதி த/பெ கிருஷ்ணன் மற்றும் 14) திரு.ஆர்.செல்வம் த/பெ ராமசாமி ஆகியோர் நின்றிருந்தனர்.

அதன் பிறகு நான், மேற்படி நபர்களை அவரவர்கள் இடத்தில் இருக்கும்படி அறிவுறுத்தினேன். பின்னர் எனது அறிவுறுத்தலின்படி காவல் குழுவினர் மேற்படி அலுவலகத்தையும், அங்கிருந்தவர்களையும் சோதனை செய்தபோது கீழ் கண்டவகையில் கணக்கில் வராத தொகை கைப்பற்றப்பட்டது.

<u>திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத ரொக்கப் பணம் விவரம்:</u>

1. பாவடைராயன் வயது 60/2025 த/பெ வெங்கடேசன், பாளையப்பட்டு தெரு, உளுந்தூர்பேட்டை என்றும் தான் உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுலகத்தில் தற்காலிகமாக துப்புறவு வேலை மட்டும் பதிவறையில் உள்ள பதிவேடுகளை ஒழுங்கு படுத்தும் வேலை செய்வதாகவும் கூறினார். அவரை சோதணை செய்த போது அவரிடம் ரூ.2000/- (500 x 4) பணம் இருந்தது, பணம் சம்மந்தமாக விசாரித்த போது அவர் தான் உளுந்தூர்பேட்டையில் வசித்து வருவதாகவும், இங்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நடக்கும் அணைத்து விதமான எப்சி, புதியவாகனம் பதிவுசெய்தல் பெயர் மாற்றம் செய்தல் மற்றும் இதர வேலைகளுக்கு நேரடியாகவோ அல்லது இடைதரகர் .மூலமாகவோ நான் தான் இலஞ்சமாக பணம் பெற்று அதனை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அலுவலக நேரம் முடித்து அவரது ஒட்டுனர் ரபிக் மூலமாக கொடுப்பேன் என்று சொன்னார்.

2. தீரன், வயது 34/2025 த/பெ மோகன் வீட்டு முகவரி 4/44 அகரத்தான் கொல்லை தெரு, கள்ளக்குறிச்சி என்றும் தான் கள்ளக்குறிச்சியில் கண்சல்டிங் வேலை செய்துவருவதாக கூறினார், அவரை சோதனை செய்ததில் அவரிடம் பணம் ரூ.5,500/- (500 x 11) இருந்தது, அதை பற்றி விசாரிக்க தான் வழக்கம்போல் கள்ளக்குறிச்சி மற்றும் உளுந்தூர்பேட்டையில் உள்ள வாகனங்களுக்கு எப்சி மற்றும் இதர வேலைக்கு பணி முடிந்த பிறகு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு இலஞ்சமாக கொடுப்பதற்கு வைத்திருந்ததாக சொன்னார்.

3. திரு.சக்கரபாணி வயது 58/2025 த/பெ முத்து குமாரசாமி, வீட்டு முகவரி. பண்ருட்டியார் நகர், கடலூர் என்றும் தான் கல்யானி டிரான்ஸ்போட்டில் மேலாளர் வேலை பார்ப்பதாக சொன்னார். அவரை சோதணை செய்த போது அவரிடம் ரூ.39,000/- (500 x 78) பணம் இருந்தது. அதை பற்றி விசாரிக்க அது வழக்கம் போல் தங்களது கம்பனி வாகனங்களை விடிவிக்கவும், இதர பணிகளுக்கும் பணி முடிந்த பிறகு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு இலஞ்சம் கொடுப்பதற்காக வைத்திருந்ததாக சொன்னார்.

4. திரு.தியாகராஜன், வயது 41/2025 த/பெ சுப்புராயன், வீட்டு முகவரி. கடைதெரு, ஆர்காடு, விழுப்புரம் மாவட்டம் என்றும் தான் தாரா மோட்டார் டீலர் கம்பேனியில் ஓட்டுநராக பணிபுரிவதாக சொன்னார். அவரை சோதணை செய்த போது அவரிடம் ரூ.12,000/- (500 x 24) இருந்தது, அதை பற்றி விசாரிக்க அவர் தங்கள் கம்பேனி தொடர்புடைய வாகனங்களை பதிவு செய்ய மற்றும் இதர பணிகளுக்கு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு இலஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என சொன்னார்.

5. திரு.பாலா வயது 41/2025 த/பெ சம்பத் வீட்டு முகவரி. எண்.192 எம்.ஜி.ஆர் தெரு, தேவனூர், திருக்கோவிலூர் என்றும் தான் சவுத்திரி ஆட்டோ பைனாஸ் கம்பேனியில் வேலை செய்வதாக சொன்னார். அவரை சோதணை செய்த போது அவரிடம் பணம் ரூ.18,500/- (500 x 36), (200 x 2) மற்றும் (100 x 1) இருந்தது, அதை பற்றி விசாரிக்க வழக்கம்போல் எப்சி மற்றும் இதர வேலைக்கு பணி முடிந்த பிறகு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு இலஞ்சமாக கொடுப்பதற்கு வைத்திருந்ததாக சொன்னார்.

6. திரு.ரபிக், வயது 42/2025 த/பெ அப்துல் முனாப், வீட்டு முகவரி. வடக்கு தெரு, விழுப்புரம் என்றும், தான் தற்போது உள்ள மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அவர் விழுப்புரம் மாவட்டத்தில் பணிபுரிந்த போதேயிருந்து ஒட்டுனராக பணிபுரிந்து வருவதாகவும், அவர் தற்போது பயன்படுத்தி வரும் Swift காரை தான், தான் ஓட்டி வந்ததாக தெரிவித்தார், மேலும் கள்ளக்குறிச்சி மற்றும் உளுந்தூர்பேட்டை வட்டாரத்தில் எப்சி மற்றும் இதர வேலைகளுக்கு வரும் வாகனங்களிடம் நேரடியாகவோ அல்லது இடைதரகர் மூலமாகவோ பணம் பெற்று மோட்டார் வாகன ஆய்வாளருக்கு கொடுப்பேன் என்று சொன்னார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.7,500/- (500 x 15) இருந்தது. அதை பற்றி கேட்க அவர் தான் மேற்கூறியதை போல் இன்றை தின அலுவலகளுக்கு தான் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு கொடுக்க இலஞ்சமாக பெற்று வைத்திருந்த பணம் என்று கூறினார்.

7. திரு.திருமலை வயது 36/2025 த/பெ கண்ணன் வீட்டு முகவரி. மாரியம்மன் கோவில் தெரு, உளுந்தூர்பேட்டை என்றும் தான் வெங்டாசலபதி ஓட்டுர் பயிற்சி பள்ளியில் வேலை செய்து வருவதாக சொன்னார். அவரை சோதனை செய்த போது ரூ.10,500/- (500 x 21) இருந்தது, அதை பற்றி விசாரிக்க வழக்கம்போல் எப்சி மற்றும் இதர வேலைக்கு பணி முடிந்த பிறகு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு இலஞ்சமாக கொடுப்பதற்கு வைத்திருந்ததாக சொன்னார். மேலும் 1 முதல் 7 வரையிலான நபர்களிடம் இருந்த பணம் வட்டார போக்கு வரத்து அலுவலத்தில் பணிபுரியும் அலுவலருக்காக கொடுத்த மற்றும் கொடுக்க வேண்டிய பணம் என்று ஊர்ஜீதம் ஆனதால் மேற்படி தொகைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

அதனை தொடர்ந்து ஹாலுக்கு கிழக்கு புரம் அமைந்துள்ள படிக்கட்டின் அடியில் சோதணை செய்த போது அங்கு போடப்பட்டிருந்த மர பெஞ்சின் மறைவில் ரூ.76,000/- (500 x 140), (200 x 15), (100 x 28) மற்றும் (50 x 4) இருந்தது அதை பற்றி கேட்க இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். எனவே மேற்படி தொகையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

வட்டார போக்குவரத்து அலுவலக தென் மேற்கு மற்றும் தென் கிழக்கு மூளையில் இருந்த பதிவறைகளையும், அலுவலகத்தின் மாடிபடிக்கு ஒட்டினாற் போல் உள்ள எழுது பொருள் அறையையும் அதற்கு எதிரே உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அறையும் சோதணை செய்ததில் சந்தேகம் படும் வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை.

இந்த திடீராய்வின்போது மேற்படி வகையில் கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத மொத்த தொகை ரூ.1,71,000/- (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தொராயிரம் ரூபாய் மட்டும்) ஆனது வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் டிரைவிங் ஸ்கூல் நடத்துபவர்கள் மற்றும் புரோக்கர்கள் போன்று செயல்படும் வெளிநபர்களிடமிருந்து இலஞ்சமாக பெற்றிருக்க கூடும் என விசாரணையில் தெரிய வருவதால் மேற்படி தொகையினை மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன்.

பின்பு அலுவலத்தில் இருந்த பதிவேடுகளான 1) அலுவலக வருகை பதிவேடு-2 2) பணம் இருப்பு பதிவேடு ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பிறகு அலுவலகத்தில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-1) மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு தலைமை காவலர் திருமதி.தேவிகா என்பவர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் கள்ளக்குறிச்சி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர்

இன்று 12.06.2025-ம் தேதி சுமார் 14.50 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு சுமார் 22.45 மணிக்கு முடிக்கப்பட்டது.

மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட இலஞ்ச தொகை மற்றும் உளுந்தூர்பேட்டை வட்டரா போக்குவரத்து அலுவலகத்தில் கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத தொகைகள் மொத்தம் **ரூ.1,71,000/-** அளவிற்கு கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக நான் கொடுக்கும் புகாரின் பேரில் சம்மந்தப்பட்ட அலுவலர்களான 1) திரு.ஆ.மாணிக்கம் வயது 59/2025 த/பெ ஆறுமுகம், மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-1, கள்ளக்குறிச்சி, (பொறுப்பு) உளுந்தூர்பேட்டை 2) பாவடைராயன் வயது 60/2025 த/பெ வெங்கடேசன், தனிநபர் 3) தீரன், வயது 34/2025 த/பெ மோகன், தனிநபர் 4) திரு.சக்கரபாணி வயது 58/2025 த/பெ முத்துகுமாரசாமி, தனிநபர் 5) திரு.தியாகராஜன், வயது 41/2025 த/பெ சுப்புராயன், தனிநபர் 6) திரு.பாலா வயது 41/2025 த/பெ சம்பத், தனிநபர் 7) திரு.ரபிக், வயது 42/2025 த/பெ அப்துல் முனாப், தனிநபர் 8) திரு.திருமலை வயது 36/2025 த/பெ கண்ணன் தனிநபர் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

Sir,

Received the above computer typed complaint on 13.06.2025 at about 7.00 hrs. Hence, I registered a case in Kallakurichi Vigilance and Anti-Corruption, Cr.No.03/2025/KLK, u/s 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 106 BNSS at 08.00 hrs today on 13.06.2025 and took up for Investigation sd xxxxxx on 13.06.2025 (K.Sathiyaraj) Deputy Superintendent of Police, V&AC, Kallakurichi).

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Hon'ble Chief Judicial Magistrate, Kallakurichi and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

13/06/2025

(K.Sathiyaraj)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Kallakurichi.